# “என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல”

*சனதெரீன் சங்கத்தாரின் முன் நடந்த விசாரணையில் இயேசு தேவதூஷணம் கூறியதாகக் குற்றம் சாட்டப்பட்டார் (மத். 26:65). அவர் மக்களின் நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்பட்ட பொழுது, ஒரு புதிய குற்றச்சாட்டு அவசியமாய் இருந்தது. அவர்கள், “இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட ராஜாவென்றும், ராயருக்கு வரி கொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி, ஜனங்களைக் கலகப்படுத்தக் கண்டோம்” (லூக். 23:2) என்று கூறினார்கள். விசாரணையின் போது இயேசுவினிடத்தில் பிலாத்து, “நீ யூதருடைய ராஜாவா?” என்று கேட்டார், இயேசு, “என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல” என்று பதில் கூறினார் (யோவா. 18:33-37ஐக் காணவும்).*

*சுவிசேஷ நூல்களில் கிறிஸ்துவின் இராஜ்யம் பற்றிய மூன்று தலை சிறந்த பண்புகள் வெளிப்படுத்தப்படுகின்றன, அவை இராஜ்யமானது இவ்வுலகத்திற்குரியதல்ல என்ற அவரது அறிவிப்பை வலியுறுத்துகின்றன.*

## குடிமையியல் இராஜ்யம் அல்ல

*கிறிஸ்துவின் இராஜ்யமானது அதன் இயல்பில் இவ்வுலகத்திற்குரியதாய் இருப்பதில்லை. அது குடிமையியல் வகையைச் சேர்ந்ததல்ல. கிறிஸ்து உலகியல் சார்ந்த அரசரல்ல; ஆகையால் அவர் இராயனுக்குப் போட்டியாளராய் இருந்ததில்லை. பவுல் விளக்கப்படுத்தியபடி அது, “தேவனுடைய இராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல” (ரோமர் 14:17). இயேசு, “தேவனுடைய இராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது” (லூக். 17:20) என்று கூறினார். அதன் இயல்பானது உடல் சார்ந்ததாய் இராமல், ஆவிக்குரியதாய் இருக்கும். இது இராஜ்யத்தின் இயல்பு பற்றிய ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கருத்தை மறுக்கின்றது.*

*கிறிஸ்துவின் இராஜ்யத்தினுடைய இயல்பானது இது பூமியின் இராஜ்யங்களுடன் ஒன்றிணைக்கப்படாதது என்ற உண்மையையும் வலியுறுத்துகின்றது. சபையும் அரசும் தனித்தனியே வைக்கப்பட வேண்டும்; இவ்விரண்டையும் ஒன்று கலக்க முடியாது. அவைகளின் சாரத்திலேயே அவைகள் மாறுபட்டவைகளாய் உள்ளன. ஒருவர் இவ்விரு இராஜ்யங்*

*களிலும் குடிமகனாய் இருக்க முடியும். அவர் இராயனுக்குரியதையும் தேவனுக்குரியதையும் செலுத்த வேண்டும் (மத். 22:17-21; ரோமர் 13:7; 1 பேது. 2:17).*

*பூமிக்குரிய வகையிலேயே சிந்தனை கொண்டிருந்த பிலாத்துவுக்கு இயேசுவின் பதிலானது எந்த ஒரு கருத்தையும் ஏற்படுத்தவில்லை. "அப்படியானால் நீ ராஜாவோ?" (யோவா. 18:37) என்று அவர் கேட்டார். உலகியல் ரீதியாக மட்டும் சிந்திக்கின்றவர்களுக்கு இந்த இராஜ்யத்தைப் பற்றிய மாபெரும் சத்தியங்கள் எந்தக் கருத்தையும் ஏற்படுத்துவதில்லை.*

## உலகிற்குரிய தந்திரங்களால் ஆனதல்ல

*கிறிஸ்துவின் இராஜ்யமானது இந்த உலகம் பயன்படுத்துகின்ற தந்திரங்களால் ஆனதல்ல. உண்மையில் இதைச் சார்ந்த பல விஷயங்களில் உலக ஞானம் கட்டளையிடுவதற்கு நேர் மாறானதாக தெய்வீக விஷயங்கள்/நடைமுறைகள் உள்ளன.*

*அரசரின் பிறப்பும் அவரது இல்லத்தின் வாழ்க்கைச் சூழ்நிலையும் உலகத்தின் எதிர்பார்ப்பிலிருந்து மிகவும் மாறுபட்ட வழிமுறையில் இருந்தன. அவரது பிறப்பானது எவ்வளவு மறைவானதாக, எவ்வளவு தாழ்மையானதாக, தாழ்ந்த நிலையுடையதாக ஆயிற்று. அவருக்கு அரண்மனை எதுவும் இல்லை, ஒரு நகருக்குள் நுழையும் போது இசையுடன் ஊர்வலம் செல்லவில்லை, அவருக்கு பணி செய்வதற்குப் பிரபுக்களும் பணிப் பெண்களும் இல்லை. இழிவாகக் கருதப்பட்ட நாசரேத்தில் இருந்த ஒரு எளிய தச்சுப் பட்டறையை உங்கள் மனதில் சித்தரித்துப் பாருங்கள். நாத்தானியேல் தமது காலத்தில் இருந்த பொதுவான உணர்வுக் கருத்தைக் குரலாய்க் கொடுத்தார்: "நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக் கூடுமா?" (யோவா. 1:46).*

*இயேசு தமது இராஜ்யத்தைத் தொடங்குவதில் உதவியாய் இருப்பதற்கு ஒரு குழுவைத் தேர்ந்தெடுத்தார். அவர் பணக்கார மனிதர்களையோ, தத்துவ ஞானிகளையோ அல்லது அரசியலாளர்களையே தேர்ந்தெடுக்கவில்லை, ஆனால் பொதுவான வாழ்க்கையில் இருந்த ஏழை மனிதர்களைத் தேர்ந்தெடுத்தார்.விரைவிலேயே இந்த உலகத்தின் செல்வம், புகழ், செல்வாக்கு ஆகியவை ஒன்றிணைந்து அவருக்கு எதிராக அணி வகுத்து நின்றன (அப். 4:26, 27). உலக ஞானம் தேர்ந்தெடுக்கக் கூடிய குழுவிலிருந்து எவ்வளவு மாறுபட்டதாக இயேசு தேர்ந்தெடுத்த குழு இருந்தது! உலக நோக்கில், அவர்கள் வெற்றி பெறும் வாய்ப்பெதுவும் இல்லாதவர்களாய் இருந்தார்கள்.*

*எருசலேமில் இதன் தொடக்கத்தைப் பற்றிக் கவனிப்போம் (அப். 2). அங்கு அப்போஸ்தலர்கள் வெற்றிகொள்ளும் தங்கள் முதல் பிரசங்கத்தைப் பிரசங்கித்தார்கள். அடுத்த அரை நூற்றாண்டு காலத்தில் நாம் அவர்களைப் பின் தொடர்ந்து காண்கையில், இதோ கடுகு விதையானது ஒரு மரமாக ஆனதைக் காண்கின்றோம் (மத்.13:31, 32). என்ன ஆச்சரியமான வெற்றி! அவர்களின் பலம் "உலகத்திற்குரியதாய்" இருந்ததா? இல்லவே இல்லை!*

*மனிதத்திற்கு மேலான ஒரு பலம் அவர்களின் முயற்சிகளுக்குப் பின்னால் இருந்தது. முதல் நூற்றாண்டுச் சீஷர்களின் வெற்றிக்கு இது ஒன்று மட்டுமே கருத்துருவான விளக்கமாய் உள்ளது, மற்றும் அவர்கள் இந்த "உலகத்திற்குரியதாய் இராத" ஒரு செய்தியைப் பிரசங்கித்தார்கள் என்பதே உண்மையாகும். அவர்கள் தங்கள் வெற்றிக்கு "இவ்வுலகத்தினுடையதாய் இராத" ஒரு வல்லமையின் மீது சார்ந்திருந்தார்கள்.*

*இந்த இராஜ்யத்திற்குள் அனுமதி பெறுவதற்கான நிபந்தனைகள் என்னவாயிருந்தன? அது ஆரம்பமான நாளின் போது, பேதுரு தனது பிரசங்கத்தினால் குற்றம் உணர்த்தப்பட்டு, நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டவர்களிடத்தில், ''மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், ..." (அப். 2:38) என்று கூறினார். நிச்சயமாக உலக ஞானமானது விசுவாசம், மனந்திரும்புதல், ஞானஸ்நானம் ஆகியவற்றை இராஜ்யத்திற்குள் வரும் வழிமுறையாக ஆலோசனை கூறுவதில்லை. மனிதத்துவ ஞானமானது ஞானஸ்நானத்தை ஆலோசனையாகக் கூறியிருக்காது! அது தொடக்க நடவடிக்கையாக ஞானஸ்நானத்திற்கு எதிராகக் கலகம் கூடச் செய்கின்றது. இருப்பினும், இது ஆதி சீஷர்களினால் - எருசலேமில் மட்டுமின்றி, ஒவ்வொரு இடத்திலும் - முன் வைக்கப்பட்ட திட்டமாயிருந்தது (அப். 8:12, 38; 9:18; 10:48; 16:31-34; 18:8; 19:5). இது "உலகத்தினால் உண்டான" இராஜ்யம் அல்ல.*

*இத்துடன் நாம், ஆதி சீஷர்கள் இதன் அரசரின் மரணத்தின் நினைவாக ஒரு செயலைக் கடைப்பிடித்ததையும் காண்கின்றோம். இது ஒரு எளிய விருந்தான கர்த்தரின் பந்தியாகும் (லூக். 22:29, 30; அப். 20:7; மாற். 14:22-24): அப்பமானது அவருடைய சரீரத்தின் நினைவாகவும், திராட்ச இரசமானது அவருடைய இரத்தத்தின் நினைவாகவும் உள்ளது. இத்தகைய ஒரு நினைவுச் சின்னமா மனிதத்துவ ஞானத்தினால் உயர்த்தப்பட்டிருக்கும்? கர்த்தருடைய பந்தியை மனிதர் தொடங்கவில்லை என்பது முடிவான கருத்தாக உள்ளது. இது மனிதத்துவமானதல்ல, ஆனால் தெய்வீகமானதாகும்!*

*தேவனுடைய செயல்களுக்கு ஆதாரமாயுள்ள மாபெரும் கொள்கையொன்றை பவுல் குறிப்பிட்டார்:*

> *ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார். ... மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார் (1 கொரி. 1:27-29).*

*மேலும் அவர், ''சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது" (1 கொரி. 1:18) என்றும் எழுதினார். கிறிஸ்துவின் இராஜ்யமானது பலரது ஞானத்தின் தர அளவைகளுக்கு ஏற்புடையதாயிராததால் அவர்களுக்கு அது இடறுதலுண்டாக்குவதாக உள்ளது. இந்த இராஜ்யமானது ''இந்த*

உலகத்திற்குரியதல்ல'' என்பதை எப்பொழுதும் நாம் நினைவில் வைத்திருப்போம். மதியீனமானவர்கள் ஞானவான்களாகும்படியான தெரிந்து கொள்ளுதல்களையே தேவன் ஏற்படுத்தினார்.

## சேருமிடம் பூமிக்குரியதல்ல

நிறைவாக, இராஜ்யத்தின் சேருமிடம் இவ்வுலகத்திற்குரியதல்ல. இது ''என்றென்றைக்கும் அழியாத'' ஆனால் ''தானே என்றென்றைக்கும் நிற்கும்" ஒரு இராஜ்யமாகும் (தானி. 2:44). "அவருடைய இராஜ்யத்துக்கு முடிவிராது" என்று லூக்கா 1:33 கூறுகிறது. எபி. 12:28ல் நாம், "அசைவில்லாத இராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம்'' என்று வாசிக்கின்றோம். அசையக் கூடிய இராஜ்யங்கள் மற்றும் தோன்றி மறைகின்ற அதிகாரங்கள் ஆகியவற்றின் மத்தியில், உலகமானது அக்கினிக்கு இரையாகி, பஞ்ச பூதங்களும் வெந்து உருகிப் போகும்போதும் என்றென்றும் நிலைத்து நிற்கும் ஒரு இராஜ்யத்தைப் பற்றி அறிவது ஆறுதல் உள்ளதாயிருக்கின்றது.

## முடிவுரை

இந்த இராஜ்யத்தின் குடிமகனாய் இருக்கும் ஈவானது நீங்கள் இதை விரும்பினால் உங்களுடையதாய் இருக்கின்றது. இந்த இராஜ்யத்தில் அனுமதி பெறுவதற்கான நிபந்தனைகள் இந்த இராஜ்யம் நிலைநாட்டப்பட்ட போது இருந்தது போலவே இப்பொழுதும் உள்ளது. அந்த நிபந்தனைகள் யாவை? ஒருவர் கிறிஸ்தவராகும் பொழுது அந்த இராஜ்யத்தில் பிரவேசிக்கின்றார். நாம் "இராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்றால்" "ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறக்க வேண்டுமென்று" இயேசு கூறினார் (யோவா. 3:5). அவர் தமது ஊழியத்தின் முடிவில் இதே விஷயத்தையே வேறொரு வழிமுறையில், ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (மாற். 16:16) என்று கூறினார்.